**பூஜாபிட்டிய பிரதேச சபை - 2022**
---------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பூஜாபிட்டிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூஜாபிட்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 7,506,175 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறித்த அட்டவணைகள் கிடைத்த பின்னர் சரியாக கணக்கிடப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ஓய்வூதிய திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்பு ஓய்வுதியம் ரூபா 49,505 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஓய்வூதிய திணைக்களத்தின் மீதி தயார் செய்யப்பட்ட விதம் தொடர்பான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்படவில்லை | - மேற்படி - |

#### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15,572,183 ஆன 03 கணக்கு விடயங்கள் அட்டவணைகள், பொருள் மெய்மையாய்வு அறிக்கை, | குறித்த பொருட்களை இனங்காண முடியாது எனவும் காணி மற்றும் கட்டிடங்களுக்காக | அட்டவணைகள், பொருள் மெய்மையாய்வு அறிக்கை, |

| | | | |
|---|---|---|---|
| கோவைகள் போன்ற மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | உறுதி சபையிடம் இல்லை என்பதாகும். | கோவைகள் மீதி உறுதிப்படுத்தல்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | 2019 ஆம் ஆண்டின் பின்னர் காணி மற்றும் கட்டிடங்கள் மெய்மையாய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை. | மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நிதிப் பிரமாணம் 571(3) | காலப்பகுதியை மிகைத்த ரூபா 734,573 ஆன 10 வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கிவல்லை . | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2017 மார்ச் 17 ஆம் திகதிய 2016/03 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் ஆம் பிரிவு | சபையின் பொது வியாபார தொகுதியின் 02 கடைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2019 செப்தம்பர் 03 ஆம் திகதிய CPC/ CLG/1/7/1/mgp.gy; ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதம் | அலுவலக மயப்படுத்திய கடமையில் ஈடுபடுகின்ற மற்றும் வெளிக்களத்தில் கடமைப் பிரயாணங் களுக்காக பிரயாணப் படிகளைக் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு அங்கீகாரமின்றி ரூபா 300 ஆன நாளாந்த படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் | சபை தலைவர் மற்றும் செயலாளரின் அங்கீகாரத்துடன் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அவ்வாறே 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 67,200 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,558,476 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,337,527 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,306,980 | 4,361,957 | 4,447,458 | 3,659,235 | 5,432,980 | 5,779,759 | 4,995,307 | 3,744,736 |
| (ii) | வாடகை | 5,129,648 | 4,381,873 | 4,980,127 | 298,198 | 4,694,690 | 4,838,971 | 4,517,499 | 896,452 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,702,050 | 2,485,635 | 2,485,635 | - | 2,005,200 | 980,440 | 1,243,240 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 25,643,240 | 13,733,285 | 30,785,522 | 15,488,533 | 22,275,000 | 19,361,802 | 23,748,841 | 32,540,770 |
| | | 37,781,918 | 24,962,750 | 42,698,742 | 19,445,966 | 34,407,870 | 30,960,972 | 34,504,887 | 37,181,958 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி**<br>மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வீதவரி ரூபா 3,641,267 ஆக இருந்ததுடன் ஒரு அலகில் இருந்து நிலுவை வீதவரி ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 74 ஆதனங்களில் | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை சேகரித்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| மொத்தம் ரூபா 842,982 ஆன வீதவரியை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) 33 – 35 ஆம் விதிகளின் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| **(ஆ) நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிட மிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 528,068 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 12,988,872 ஆக இருந்தது. | இதுவரை நிதிஏற்பாடு கிடைக்கவில்லை. | குறித்த முத்திரைக் கட்டணங்களையும் நீதிமன்ற தண்டப் பணத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த பாதீட்டில் வீதிகள், வடிகாண்கள், கட்டிடங்கள் போன்ற செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 15,575,000 ஆன 23 அபிவிருத்தி திட்டங்கள் ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு உட்பட்டு செயல்படுத்த முடியாது இருந்தது. | பாதீட்டு முன்மொழிவுகள் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) செயல் நடவடிக்கை திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 4,000,000 ஆன மதிப்பிடப்பட்ட 04 செயற்திட்டங் களுக்காக மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 1,340,243 செலவிடப்பட்டிருந்த போதும் எதிர்பார்த்த விளைவு மட்டத்தை (output)அடைந்திருக்கவில்லை. | பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநிறுத்த நேர்ந்தது. | திட்டங்களின் வேலைகளை பூர்த்தி செய்து பயன்பாட்டுக்கு எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கழிவுப்பொருள் முகாமைத்துவத் திற்காக உத்தேச எனசெல்மட காணி அளவீடு மற்றும் கையேற்றல் கட்டணமாக 400,000 தொகை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு 2013 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதும் கணக்காய்வு தினம் வரை காணி கையேற்கப்பட்டு கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | காணியை கையேற்பதில் சிக்கலான நிலைமையொன்று உருவாகியுள்ளது. | காணியை கையேற்று கழிவுப்பொருள் முகாமைத்துவம் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | சபையின் மீண்டெழும் வருமானம் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொதுமக்களின் பொதுவிடயங்கள், நலன்புரி, மற்றும் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தாமல் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 41,664,404 ஆன நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மக்கள் வங்கி நடைமுறை கணக்கில் ரூபா 34,742,243 விளைவவற்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் பொது பயன்பாட்டுக்காக ஈடுபடுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மிகை தொகையை பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1994 ஆம் ஆண்டிலிருந்து வரும் ரூபா 109,952 ஆன கெப் வண்டி திருத்தக் கணக்கின் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 02 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 11,466,468 ஆக இருந்ததுடன் அதில் 3 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா 47,918 தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 1,945,067 கூட்டுத்தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | குறித்த மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 22,484,868 ஆன கடன் கொடுத்தோர் மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் 1 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 11,891,273 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 597,804 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

**3.4 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ரூபா 14,426,024 ஆன 04 வாகனங்கள் 02 இயந்திர உபகரணங்கள் மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத 01 வாகனம் என்பன 01 இற்கும் 07 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக விளைற்றும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டன. | திருத்தங்களைச் செய்வதற்கும் கைதவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 12 பதவிகளில் 25 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 10 மிகைகளும் காணப்பட்டன. | அரசின் கொள்கைகள் செயற்படுத்தியதன் காரணமாக வெற்றிடங்கள் உருவாகியிருந்ததுடன் மிகை பதவியணியினர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாவர். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு பதவியணியினரை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இட மாற்றம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 392,050 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | மாகாண திறைசேரிக்கு தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் | 2022 அரசின் செலவின முகாமைத்துவ | கவனத்துடனும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டும் |

| | | |
|---|---|---|
| உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 04 வருமான விடயங்களில் 30 சதவீதம் முதல் 71 சதவீதம் வரையிலும் 15 செலவின விடயங்களில் 65 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதுடன் 21 செலவின விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்த ரூபா 2,315,000 நிதி ஏற்பாடுகளில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாததால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட நேர்ந்ததாக. | பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங் காணப்பட்டிருந்ததுடன் அவை அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக செயற்படுத்த முடியாதிருந்தது. | நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்துதல் வேண்டும். |